**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,</u>**

**<u>SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No. STC-456/2021**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | ராமகிருஷ்ணன் | Prosecution | |
| Fathers Name | வரதராஜன் | Defence | DW -2 |
| Village | திருவெங்காடு | Taluk | Sirkali |
| Calling | | Age | 36/2025 |

**Solemnly affirmed by Tmt.R.Geetha, Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day**
**<u>19.05.2025.</u>**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணையின் தொடர்ச்சி**

நான் தற்போது SBI, திருவெங்காடு கிளையில் Assistant Manager ஆக வேலை செய்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து எங்கள் வங்கி கிளை மேலாளருக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையை தொடர்ந்து அவர் சார்பாக நான் இன்று ஆஜராகி சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். (**சாட்சியின் பணியாளர் அடையாள அட்டை அதன் அசலோடு ஒப்பீடு செய்யப்பட்டு எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) எங்கள் வங்கிக் கிளையில் உமா மகேஸ்வரி என்பவர் சேமிப்பு கணக்கு வைத்துள்ளார். அந்த வங்கிக் கணக்கின் எண் 11401700744 என்பதாகும். மேற்படி வங்கி கணக்கிற்கு உரிய 01.01.2020 முதல் 31.12.2020 காலகட்டத்திற்கு உண்டான **வரவு செலவு பட்டியலை** நான் இன்று எடுத்து வந்துள்ளேன். அதனை தற்போது தாக்கல் செய்கிறேன். (மேற்படி **ஆவணம் எ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). மேற்படி வங்கி கணக்கு பட்டியலை பார்க்கும்போது, கடந்த 29.05.2020 தேதியன்று காசோலை 316462 மூலமாக ரூ.40,000/- சுவாமிநாதன் என்பவரிடமிருந்து பணம் வரவு வந்துள்ளது தெரிய வருகிறது. மேற்படி சுவாமிநாதன் என்பவருடைய வங்கி கணக்கு எண் 0032045616180 என்பதாகும். அழைப்பாணையில் கோரப்பட்டிருந்த விவரங்களை நான் தாக்கல் செய்து விட்டேன்.

**புகார்தாரர் தரப்பில் யாரும் ஆஜர் இல்லை என்பதால் குறுக்கு விசாரணை தன்னிச்சையாக முடித்து வைக்கப்பட்டது.**